**செய்தி வெளியீடு எண்.42** **நாள்.27.05.2021**

**பத்திரிக்கை செய்தி**

கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்ய வேண்டி மாவட்ட அளவிலான பணிக் குழு கூட்டம் இணையவழி வாயிலாக **27/5/2021** இன்று சென்னை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொரோனா பெருந்தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகள் கொரோனா பெருந்தொற்றால் ஒரு பெற்றோரை இழந்த குழந்தைகள், மருத்துவமனைகளில் கொரோனா பெருந்தொற்றிக்கு சிகிச்சைப் பெற்று வரும் பெற்றோரின் குழந்தைகள் , உறவினர்கள் மற்றும் பாதுகாவலர்கள் இன்றி தனித்துவிடப்பட்ட குழந்தைகள் மருத்துவமனையில், கொரோனா பெருந்தொற்றிற்கு சிகிக்சை பெற்றுவரும் குழந்தைகள் மற்றும் ஆற்றுப்படுத்துதல் உளவியல் ஆலோசனை தேவைப்படும் குழந்தைகள் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினை உறுதி செய்ய சமூக ஊடகங்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் அக்குழந்தைகளுக்கான உதவி எண் : 1098 பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய பிற துறைகளுடன் இணைந்து செயல்படுத்துவது குறித்தும் இவ்வாறான குழந்தைகளின் மறுவாழ்வை உறுதிசெய்யும் வகையில் அவர்களுக்கான பராமரிப்பு நிலையத்தை **(CARE CENTER)** கண்டறிவது போன்ற பல்வேறு தகவல்கள் குறித்து பேசப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட அளவிலான பணிக்குழு **(District Task Force)** உறுப்பினர்கள் பங்கேற்று தங்கள் ஆலோசனைகளை வழங்கினர். மேலும் 1. பாலவிஹார் மனநலம் குன்றிய சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கான குழந்தைகள் இல்லம், 2. பாலமந்திர், 3. அருண் ரெயின்போ., 4. தி மெட்ராஸ் சேவா சதன், 5. மெட்ராஸ் கிறிஸ்டின் கவுன்சில் ஆப் சோஷியல் சர்வீஸ் ஆகிய ஐந்து குழந்தைகள் இல்லங்கள் கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உறுதி செய்ய சிறப்பு மையங்களாக (**Covid Care Centre)** செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**